பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 30

வியாழக்கிழமை
26 டிசெம்பர் 2024

மார்கழி 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## விபத்தில் காயமடைந்த முதியவர் சாவு

யாழ்., டிசெ. 26
விபத்தில் காயமடைந்த முதியவர் ஒருவர் நேற்று உயிரிழந்துள் 11

## இலங்கைக்கு சீன அரசு கூடுதலான உதவிகள்!

» 02

## விவசாயிகளுக்கு இழப்பீடுகள்: அனுமதித்தது அமைச்சரவை!

» 03

ஜனாதிபதி அநுரவின்

# வெளிநாட்டுப் பயணத்தின்போது இரகசிய ஒப்பந்தம் கைச்சாத்தா?



### எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வில் கேள்விகளை அடுக்க எதிரணி முடிவு

**கொழும்பு, டிசெம்பர் 26**

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்தியப் பயணத்தின் போது இரகசிய ஒப்பந்தங்கள் ஏதாவது கைச்சாத்தாகினவா? என்பது தொடர்பிலும், ஜனாதிபதியின் சீனப் பயணம் தொடர்பிலும் கேள்விகளை அடுக்க பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தயாராகி வருகின்றதென அறியமுடிகின்றது.** 11

யாழில் நகைக்கடையொன்றில்

## ஒருகோடி ரூபா பெறுமதியான பணமும், நகைகளும் திருட்டு!

யாழ்ப்பாணம், டிசெ. 26
யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள நகைக்கடையொன்றில் ஒரு கோடி ரூபா பெறுமதியான பணம் மற்றும் நகைகள் என்பன திருடப்பட்டுள்ளன.
நகைக்கடையின் கூரை பிரித்து 30 பவுண் நகை மற்றும் 40 லட்சம் ரூபா பணம் என்பனவே இவ்வாறு திருடப்பட் 11

இணுவிலில்

## குடும்பமொன்றின் மீது கொலைவெறித் தாக்கு

யாழ்ப்பாணம், டிசெ. 26
சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இணுவில் பகுதியில், குடும்பமொன்றின் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இருவர் படுகாயமடைந்த நிலை 11

வவுனியா மருத்துவமனையில்

## கழுத்துக்குள் பாய்ந்த தடி வெற்றிகரமாக அகற்றல்

வவுனியா, டிசெ. 26
முதியவர் ஒருவரின் கழுத்துக்குள் ஆழமாகப் பாய்ந்த கூரிய தடி, வவுனியா மருத்துவர்களின் முயற்சியால் அகற்றப்பட்டுள்ளது. மருத்துவ உலகில் 11

## கிளிநொச்சியில் கோரம் விபத்தில் பாலகி சாவு!



### தந்தை, தாய், மகள் படுகாயம் மதுபோதையில் டிப்பர் சாரதி!

கிளிநொச்சி, டிசெ. 26
கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனைக்கு முன்பாக, நேற்று இரவு இடம்பெற்ற டிப்பர் விபத்தில் கஜன் அபிவர்னி (வயது - 2) என்ற பாலகி உயிரிழந்துள்ளார்.
அந்தப் பாலகியின் பெற்றோரான வரதீஸ்வரன் கஜன் 11

## மஹிந்தவுக்காக நீதிமன்றத்தை நாடும் பெரமுன

கொழும்பு, டிசெ. 26
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் இராணுவப் பாதுகாப்பு நீக்கப்பட்டமை தொடர்பில் நீதிமன்றத்தை நாடுவதற்குரிய 11

## புங்குடுதீவில் அதிகரிக்கும் பல்வேறு குற்றச்செயல்கள்

### பொலிஸார் அசமந்தம் என பொதுமக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 26
யாழ்ப்பாணம், புங்குடுதீவு பாடசாலைகளுக்கு அருகாக உள்ள பகுதிகளிலும், பற்றைக்காடுகளிலும் பல்வேறு குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன என்று 11

## யாழ்ப்பாணக் கொள்ளைக்குழு கம்பளைப் பொலிஸாரால் கைது

கொழும்பு, டிசெ. 26
யாழ்ப்பாணத்தில் இருந்து சென்று நாட்டின் பல பகுதிகளிலும், வீடுகள் மற்றும் நகையகங்களை உடைத்து கோடிக்கணக்கான பணம், தங்க ஆபரணம், கையடக்கத் தொலைபேசிகள் உட்பட மேலும் பல பொருள்களைக் கொள்ளையிட்ட குழுவொன்று 11

## சுனாமிப் பேரவலம் நிகழ்ந்து இன்றுடன் 20 ஆண்டுகள்!

### நாடெங்கும் அஞ்சலி நிகழ்வுக்கு ஏற்பாடு தேசியப் பாதுகாப்புத்தினம் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 26
2004ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி இலங்கையில் பல்லாயிரம் பேரைக் காவுவாங்கிய சுனாமிப் பேரவலம் நிகழ்ந்து இன்றுடன் 20 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இதைமுன்னிட்டு நாடெங்கும் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 11

## கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூடுகிறது இன்று

கிளிநொச்சி, டிசெ. 26
கிளிநொச்சி மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இன்று இடம் 11



முச்சந்தி முரளி

'திரைகடலோடி திரவியம் தேடின பரம்பரை இப்ப திருடப்போயிருக்கு பாருங்கோ'

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையுடன் நெருக்கம் உதவி வழங்கவும் தயார்!

## சீனா அறிவிப்பு



**கொழும்பு, டிசெ. 26**

**இலங்கையுடன் மிக நெருங்கிய உயர்மட்டத் தொடர்பைப் பேணுவதற்குத் தாம் தயாராக இருப்பதாக சீன வெளிவிவகாரப் பேச்சாளர் மாவோ நிங் தெரிவித்துள்ளார்.**

பீஜிங்கில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

சீனாவும், இலங்கையும் ஒருவருக்கொருவர் அவசியமான உதவிகளை வழங்குகின்ற, நீண்டகால நட்புறவைக் கொண்டிருக்கின்ற ஒத்துழைப்புப் பங்காண்மை நாடுகளாகும். இருநாடுகளுக்கும் இடையில் மிகநெருக்கமான உயர்மட்டத் தொடர்புண்டு. அத்தகைய உயர்மட்டத் தொடர்புகளைப் பேணுவதற்கும், இருநாடுகளுக்கும் இடையிலான பாரம்பரியத் தொடர்புகளை முன்கொண்டு செல்வதற்கும், இருநாடுகளுக்கும் இடையிலான பல்துறைசார் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கும் சீனா தயாராக இருக்கிறது என்றும் குறிப்பிட்டார். (ச-இ)



# மஹிந்தவின் பாதுகாப்பு பொறுப்புடன் செயற்படுக

## அரசாங்கத்துக்கு எதிர்க்கட்சி 'அட்வைஸ்'

கொழும்பு, டிசெ. 26

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்புத் தொடர்பில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்படவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேவையற்ற விதத்தில், அளவுக்கு அதிகமாக பிரபுக்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படுவதை நாம் அனுமதிக்கவில்லை. எனினும், உரிய மீளாய்வு, விஞ்ஞானபூர்வமான ஆய்வுகள் இன்றி பழிவாங்கும் நோக்கிலேயே தற்போதைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனால்தான் சமூகத்தில் விமர்சனங்கள் எழுந்துள்ளன. மஹிந்தவின் பாதுகாப்புத் தொடர்பில் அரசாங்கத்துக்கு பொறுப்பு இருக்க வேண்டும் - என்றார். (ச-44)

# கடன் ஸ்திரத்தன்மை இலங்கை தரமுயர்வு

கொழும்பு, டிசெ. 26

இலங்கையின் கடன் நிலைவரத்தின்படி, வெளியகக்கடன் தளர்வு மற்றும் அரசாங்கத்தின் திரவ அச்சுறுத்தல் என்பன குறைவடைந்திருப்பதாகவும், நிதியியல் மற்றும் கடன் ஸ்திரத்தன்மை பெற்றுள்ளதாகவும் சர்வதேச கடன் தரப்படுத்தல் நிறுவனங்களில் ஒன்றான 'மூடிஸ்' சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி தனியார்துறை கடன்வழங்குநர்கள் வசமிருந்த சர்வதேச முறிகளின் கடன்மறுசீரமைப்பு பூர்த்திசெய்யப்பட்டதை அடுத்து, அது கடன்களை மீளச்செலுத்தமுடியாத முறிவு நிலை ஏற்படுவதற்கான அச்சுறுத்தல் தணிக்கப்பட்டுள்ளது.

அதன் காரணமாகவே இலங்கையின் நீண்டகால வெளிநாட்டு நாணய விநியோகஸ்த்தரின் முறிவு நிலை தரமுயர்த்தப்பட்டுள்ளது. அத்தோடு தற்போதைய மறுசீரமைப்புகளைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் கொண்டிருக்கும் கடப்பாட்டை உரியவாறு நிறைவேற்றுவதன் ஊடாக நாட்டின் கடன் நிலைவரமானது எதிர்பார்க்கப்பட்டதைவிட முன்னேற்றமடையக்கூடும் என்றும் 'மூடிஸ்' நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# வெளுத்தது சாயம்

## ஹர்ஷ சுட்டிக்காட்டு



கொழும்பு, டிசெ. 26

கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தில் திருத்தங்களை மேற்கொள்வதாக பொய் கூறி தேசிய மக்கள் சக்தியினர் ஏமாற்றியுள்ளனர் என்பதை மக்கள் உணர வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடனை மீளச் செலுத்த முடியாத நாடுகள் பட்டியலிலிருந்து இலங்கை நீக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்தி மகிழ்ச்சிக்குரியது.

எனினும் தேர்தல் காலங்களில் தேசிய மக்கள் சக்தி குறிப்பிட்டதைப் போன்று கடந்த அரசாங்கத்தால் எட்டப்பட்ட இணக்கப்பாட்டை இரத்துச் செய்து, கடன் மறுசீரமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டிருந்தால் இந்தப் பலனைப் பெற்றிருக்க முடியாது.

அந்தவகையில் தேசிய மக்கள் சக்தியின் ஒழுக்கம் இங்கு கேள்விக்குறியாக்கப் பட்டிருக்கிறது - என்றார். (ச-இ)

# வளமான நாட்டுக்கு அத்திபாரமிடுவோம்

## ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 26

சகல மக்களும் நாட்டின் எதிர்காலத்துக்காக ஒன்றிணைந்துள்ளோம். பிரிவினையின் இருளில் இருந்து விலகி அமைதியுடன் ஆட்சி செய்யும் தோழர்களின் பூமியாக எமது நாடு படிப்படியாக மாற்றமடைகிறது. வளமான நாட்டை உருவாக்க வலுவான உறுதியுடன் நம்மை அர்ப்பணிக்க இந்தப் புனித நத்தார் தினத்தில் நாம் அனைவரும் உறுதி பூணுவோம் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது நத்தார் வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

வலுவான மற்றும் நிலையான பொருளாதாரம், சமூக நீதியை இலக்காகக் கொண்ட உண்மையான அரசியல் கலாசாரம் மற்றும் மனிதநேயம் மற்றும் சுதந்திரம் நிறைந்த ஒரு அழகான நாட்டை உருவாக்க வலுவான உறுதியுடன் நம்மை அர்ப்பணிக்க இந்தப் புனித நத்தார் தினத்தில் நாம் அனைவரும் உறுதி பூணுவோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# ஐ.தே.கட்சி மறுசீரமைப்பு

கொழும்பு, டிசெ.26

ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைப்பதற்குரிய ஆரம்பகட்ட செயற்பாடுகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பமாகவுள்ளதென நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பதவியை சஜித்துக்கு வழங்குவதற்கு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட தரப்பினர் பச்சைக்கொடிகாட்ட மறுப்பதால் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி இணைவு சாத்தியமான திசையை நோக்கி நகரவில்லை.

எனவே, உள்ளூராட்சி சபைத் தேர்தலை யானைச் சின்னத்தின்கீழ் எதிர்கொள்வதற்கு ஐ.தே.க. திட்டமிட்டுள்ளது. தேர்தலுக்கு முன்னதாக மறுசீரமைப்புக்கான ஆரம்பகட்டத் திட்டங்கள் வெளியிடக்கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-44)



# தனித்துக் களம் காணும் பெரமுன

கொழும்பு, டிசெ. 26

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் வடக்கு - கிழக்கு உட்பட அனைத்து தேர்தல் மாவட்டங்களிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி மொட்டுச் சின்னத்தின்கீழ் போட்டியிடும் என்று அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் நாம் வேட்பாளர்களை நிறுத்தவுள்ளோம். உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கு புதிதாக வேட்புமனுக்கோரும் திட்டத்துக்கு நாம் முழுமையாக ஆதரவு வழங்குவோம். அதேபோல மாகாண சபைத் தேர்தலிலும் மொட்டுச் சின்னத்தின் கீழ்தான் போட்டியிட உத்தேசித்துள்ளோம்.

கட்சியில் இருந்து நாம் எவரையும் வெளியேற்றவில்லை. வெளியேறியவர்கள் எம்முடன் இணைவது தொடர்பில் பேச்சு நடத்தலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வவுனியாவில்

## பொதுமன்னிப்பில் 8 கைதிகள் விடுவிப்பு

வவுனியா, டிசெ. 26

நத்தார் பண்டிகையை முன்னிட்டு வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து 8 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் சிறு குற்றங்களுக்காக தண்டனை பெற்றிருந்த 389 பேர் நாடளாவிய ரீதியில் உள்ள சிறைகளில் இருந்து விடுதலை செய்யப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-110)

## விவசாயிகளுக்கு இழப்பீடு

கொழும்பு, டிசெ. 26

நாட்டில் கடந்த ஓரிரு வாரங்களுக்கு முன்னர் நிலவிய சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, இழப்பீடு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான விவசாயம் மற்றும் விவசாயிகளுக்கான காப்பீட்டு சபைக்காக ஒதுக்கப்பட்ட நிதி இதற்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

அதன்படி நெற் பயிர்ச்செய்கைக்காக அதிகபட்சமாக 2 ஹெக்ரேயருக்கு (5 ஏக்கர்) 40 ஆயிரம் ரூபா இழப்பீட்டையும் சோளம், உருளைக்கிழங்கு, மிளகாய், பெரிய வெங்காயம் மற்றும் சோயா உள்ளிட்ட பயிர்ச்செய்கைகளுக்காக அதிகபட்சமாக ஒரு ஹெக்ரேயருக்கு 40 ஆயிரம் ரூபா இழப்பீட்டை வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. (ச-இ)

இந்தாண்டில்

## 101 துப்பாக்கிச்சூடு 60 பேர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 26

2024ஆம் ஆண்டு இதுவரை 101 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதில் 60 பேர் உயிரிழந்துள்ள நிலையில் 44 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவங்களில் பெரும்பாலானவை போதைப்பொருள் தகராறு காரணமாக நிகழ்ந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களே என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ச-இ)



## தம்பதியர் மீது துப்பாக்கிச்சூடு

### கணவன் பலி

கொழும்பு, டிசெ. 26

வெல்லவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மரலுவாவ பகுதியில் வீடொன்றில் தம்பதியினர் மீது இனந்தெரியாத ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த தம்பதியினர் குருநாகல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், கணவன் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். 32 வயதுடைய நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளை வெல்லவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## பேண்தகு அபிவிருத்தி ஐ.நா. வுடன் ஒப்பந்தம்

கொழும்பு, டிசெ. 26

பேண்தகு அபிவிருத்திக்கான 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இலங்கைக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் கற்றல் ஒத்துழைப்புகள், இராஜதந்திரிகளுக்கான பயிற்சிகள் மற்றும் பூகோளத் தகவல் தொழிநுட்பப் பயன்பாடு தொடர்பான பயிற்றுவித்தல்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (ச-இ)




'எல்லாரும் சமம்' எண்டு சும்மா வெளிப்பேச்சுக்கு சொல்லுறமே தவிர, இப்பவும் எல்லாத்திலையும் 'நான் மேல , நீ கீழ' எண்ட பிரிப்புத்தான் கூடுதலா இருக்கு. இந்தப் பிரிப்பு சிலவேளை ஏன், எதுக்கு எண்ட காரணமே இல்லாமல், பேய்த்தனமாவும் நடக்கிறதைப் பாக்கேக்க சிரிப்புத்தான் வரும். அப்பிடி ஒரு விசயத்தைத்தான் பட்சி இண்டைக்குச் சொல்லப்போகுது.

யாழ்ப்பாணத்துக்கும் மன்னாருக்கும் போய்வாற சீ.ரி.பி. பஸ் அது. எப்பவும் அந்த பஸ்ஸில சனமாத்தான் இருக்கும். அதிலையும் காலமையும், பின்னேரமும் நிக்கவே இடமிருக்காது. அப்பிடியும் ஆருக்கும் லொத்தர் விழுந்தமாதிரி சிலவேளையில இடைவழியளில ஆரும் இறங்கினால் சீற் கிடைக்கும். அதால கனபேர் பஸ் வெளிக்கிட ஒரு மணித்தியாலத்துக்கு முதலே, பஸ் ஸ்ராண்டுக்குப் போய் சீற் பிடிச்சுப் போறவை. பிந்திவாறவை எவ்வளவு தூரமெண்டாலும் நிண்டுதான் போகோணும். சிலவேளையளில முதல் சொன்னமாதிரி, தெய்வாதீனமா ஆரும் இடையில இறங்கினால், அவையின்ர சீற்றில போய் இருக்கலாம். அதுக்கையும் கனக்க ரூல்ஸ் இருக்காம். அப்பிடி இடையில ஆரும் சீற்றில இருந்தால், கொண்டக்டர் ஏதோ கொலை நடந்தமாதிரி பரபரத்துக்கொண்டு அங்க வருவார். வந்ததும் வராததுமா "சீசனோ? ரிக்கெற்றோ?" எண்டுதான் கேப்பார். தப்பித்தவறி அந்தச் சீற்றில இருந்தது 'சீசனில' (பருவகாலச்சீட்டு) வாறவையா இருந்தால் கதைகந்தல் தான் . அவை இறங்குமட்டும் ஓயாத அலை மாதிரி கொண்டக்டர் தும்புபறக்க கத்திக்கொண்டே இருப்பார். "உந்தச் சீசன்காரருக்கு எத்தினை தரம் சொன்னாலும் அறிவு வாறேலையோ? நீங்களென்ன உங்கட வசதிக்கு சீற்றில குந்திடுவியள். ஆனால் ரிக்கெற் வாங்கி ஏற நிக்கிறவை, உள்ளுக்க சீற் இல்லையெண்டு ஏறாமல் விட்டிடுவினம். சீசன் வாங்கத் தெரிஞ்சவைக்கு அறிவிருந்தால் ஏனிந்தப்பாடு" எண்டு பொரிஞ்சு தள்ளிக்கொண்டே வருவார். அந்தப் பயத்தால, ஆரும் இடையில இறங்கி சீற் இருந்தாலும் கூட சீசன் எடுத்துப் போய்வாறவை, தாங்கள் இறங்கிற இடம் வரும் வரைக்கும் நிண்டுதானாம் போறவை.

சீசன் எடுத்துப் போறவை கீழானவை எண்டும், ரிக்கெற் எடுத்துப் போறவைக்குத்தான் சீற்றில இருக்கத் தகுதியெண்டும் ஆர் உந்தக் கொண்டக்டருக்கு சொன்னவையெண்டு தெரியேலை. உண்மையா சீசன்காரருக்குத்தான் முன்னுரிமை குடுக்கோணும். அவைதான் தாங்கள் பஸ்ஸில போகாத நாளுக்கும் சேர்த்து முன்னுக்கே டிப்போவில காசு கட்டியிருக்கினம். இப்பிடி அவை முன்னுக்கே காசு கட்டுறதாலதான் சீ.ரி.பி.க்கும் ஒரு நிலையான வருமானம் இருக்குது. அப்பிடிப்பட்ட சீசன்காரரை கேவலமாப் பாக்கிறதும், இழிவா நடத்துறதும் பிழையெண்டு உந்தக் கொண்டக்டர் மாருக்குத் தெரியும் தானே. அப்ப ஏன் கத்துகினம்? அதுக்கும் காரணம் இருக்கு. ரிக்கெற் எடுத்து ஏறுற எல்லாருக்கும் உவையள் ரிக்கெற் குடுக்கிறேலை. ஒரு கணக்கில ஆக்கள் ஏறினதும் ரிக்கெற் குடுக்காமல் காசை மட்டும் வாங்குவினம். ஆனால் சீசன் எடுத்து வாறவையிட்ட இப்பிடி விளையாட்டுக் காட்டேலாதெல்லோ. அதுதான் இப்பிடிப் பாய்ச்சலாம்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மகிழ்ச்சி தரும் நாளாக இருக்கும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. தந்தைவழியில் சில செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு வெளியூரில் இருக்கும் கோயில்களுக்குச் சென்று தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** உற்சாகமான நாளாக இருக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**கடகம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத் துணையுடன் அனுசரித்துச் செல்லவும். உறவினர்கள் வருகையால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. வாழ்க்கைத் துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**கன்னி:** அதிர்ஷ்டம் தரும் நாளாக இருக்கும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். சிலருக்கு கோயில்களுக்குச் சென்று வழிபாடுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படக்கூடும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடைகள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும்.


**விருச்சிகம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகை சில சங்கடங்களைத் தரும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். முக்கியமான பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கக்கூடும்.

**மகரம்:** சகோதர வகையில் ஆதாயம் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்படக்கூடும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கும், எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.


**கும்பம்:** தெய்வ அனுக்கிரகம் நிறைந்த நாளாக இருக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். சிலருக்கு குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலையவேண்டியிருக்கும். சிலருக்கு பயணங்களால் அனுகூலம் உண்டாகும். உடல் நலனில் கவனம் தேவை.





படங்கள் - ஐ.சிவசாந்தன்

## திருமுறைகள் நகர்வலமும் மார்கழிப் பெருவிழாவும்

யாழ்ப்பாணம், டிசெ. 26
மார்கழிப் பெருவிழாவில் விசேட அம்சமாக மேன்மை கொள் சைவ நீதியை உலகறிவிக்கும் பொருட்டு சிவனருட் செல்வர்களினால் தில்லைக் கூத்தன் தென்னாடுடைய சிவன் மீது பாடியருளப்பட்ட திருமுறைகள் யானை மீது ஏந்தி யாழ். நகரைச் சுற்றி எடுத்துவரப்பட்டன. யாழ்ப்பாணம் - கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் ஏற்பாட்டில் நேற்றுப் புதன்கிழமை காலை வண்ணை வைத்தீஸ்வரன் திருக்கோவிலில் விசேட வழிபாடுகளை அடுத்து இந்த நிகழ்வு ஆரம்பமானது.

ஆலய முன்றலில் ஆரம்பமாகிய திருமுறை நகர்வலப் பவனி யாழ். மாநகரை வலம் வந்து யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தை வந்தடைந்து, மார்கழிப்பெருவிழாவின் அரங்க நிகழ்வுகள் இடம் பெற்றன.

தொடர்ந்து மாலை 5 மணிவரை தில்லைக்கூத்தன் திருவம்பலம், சேக்கிழார் அரங்கம் என இரு அரங்கங்களாக மார்கழிப் பெருவிழா சிறப்புற இடம்பெற்றது. (ச-125-27,66,20)

## ஹோமப் பூசை

யாழ்ப்பாணம்,டிசெ.26
வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு ஸ்ரீ கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர ஆலய ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயங்களில் நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு மிருத்திஷ்ய ஹோமப் பூசை இடம்பெறவுள்ளதாக ஆலயப் பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ச-33)

## ஞானச்சுடர் இதழ் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ. 26
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாக ஞானச்சுடர் மார்கழி மாத 324 ஆவது இதழ் வெளியீட்டு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல்10.45 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ச-66)

## மர வளர்ப்புச் செயற்றிட்டம்



இயற்கையை வளப்படுத்துவதை நோக்காகக் கொண்டு கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் மேற்கொள்ளப்படும் "நந்தவனம்" மர வளர்ப்புச் செயற்றிட்டத்தின் 5ஆம் கட்ட மரநடுகை நிகழ்வு வவுனியா கணேசபுரம் விவேகானந்த முன்பள்ளியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில், விவேகானந்தா முன்பள்ளி மாணவச்சிறார்கள், விவேகானந்தா முன்பள்ளி ஆசிரியை, மாணவர்களின் பெற்றோர், கலைப்பீட மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-45-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

எந்த அளவு அரசியல் சுதந்திரமும் பசியுள்ள மக்களைத் திருப்திப்படுத்தாது.

– லெனின் –


## கொலைகார அலைக்கு 20 வயது

ஆழிப்பேரலையின் கோரத் தாண்டவத்தின் வலி சுமந்து இன்றோடு 20 ஆண்டுகள் கடந்துவிட்டன. இந்தோனேஷியாவின் சுமத்திரா தீவுக்கு அருகில் கடலுக்கு அடியில் ஏற்பட்ட நிலநடுக்கம் 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி ஆழிப்பேரலையை உண்டாக்கியது. இந்த ஆழிப்பேரலையால் இலங்கை உள்ளிட்ட 14 நாடுகள் பாதிக்கப்பட்டன. ஆழிப்பேரலை அதீத இழப்பை ஏற்படுத்தியிருந்தது. ஆயிரக்கணக்கான மக்களின் உயிரைப் பறித்த ஆழிப்பேரலை, பலத்த சொத்திழப்புகளையும் ஏற்படுத்தியிருந்தது. தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திலும் ஆழிப்பேரலை தாக்கத்தைச் செலுத்தியிருந்தது. தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட முன்னெடுப்புகள் ஆழிப்பேரலையால் பின்தள்ளப்பட்டிருந்தன. தமிழர் தாயகப் பிரதேசத்தின் அநேகமான கடற்கரைப் பகுதிகள் ஆழிப்பேரலை அழிவுகளை எதிர்கொண்டன. இந்தப் பேரிடரின் விளைவுகளை எதிர்கொள்ளவும் அறியாத எந்த முன்னெச்சரிக்கையும் இன்றி இருந்த மக்கள் பெரும் பாதிப்புகளைச் சந்தித்தனர். பல்லாயிரக்கணக்கானவர்கள் கடலின் சீற்றத்துக்கு இலக்காகி உயிரிழந்தனர். பலர் காணாமலும் போயிருந்தனர். ஆழிப்பேரலை உருவாக்கிய வலி எப்போதும் தீர்க்கமுடியாதது. ஆனால் அதிலிருந்து மீண்டெழும் முயற்சியில் தமிழ் மக்கள் ஒருபோதும் பின்னிற்கவில்லை.

ஆழிப்பேரலை அழிவுகளின்போது தெற்கில் இனவாதம் பல்லிளித்ததையும் தமிழ் மக்கள் நினைவிலிருத்திக்கொள்வதும் அவசியமானது. தற்போது ஜனாதிபதியாக இருக்கும் அநுரகுமார திஸாநாயக்க அதில் தொடர்புபட்டிருப்பதால் இந்தச் சந்தர்ப்பதில் அதைத் தொட்டுக்காட்டுவதும் பொருத்தமாக இருக்கும். சந்திரிகாவின் அமைச்சரவையில் விவசாயம், கால்நடைகள், நிலம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சராக 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நியமிக்கப்பட்ட அநுரகுமார திஸாநாயக்க, 2005ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16ஆம் திகதி அமைச்சர் பதவியில் இருந்து விலகினார். ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அரசாங்கம் புலிகளுடன் இணைந்து ஏற்படுத்திய வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சுனாமி நிவாரண ஒருங்கிணைப்புப் பொறிமுறையை மக்கள் விடுதலை முன்னணி எதிர்த்தது. அந்த எதிர்ப்பின் உச்சக்கட்டமாக அநுர உள்ளிட்ட மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அரசில் இருந்து வெளியேறினர். ஆழிப்பேரலை பேரழிவுக்குப் பின்னர் தமிழர் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவிருந்த நிவாரணப் பொறிமுறையைத் தடுத்து நிறுத்திய பெருமைக்குரியவர்கள் இன்றைய ஆட்சியாளர்கள் என்ற வரலாற்றை ஒருபோதும் மறந்துவிடவோ, மறைத்துவிடவோ முடியாது.

இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்புக் கிடைக்கா விட்டாலும், அப்போது தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழர் தாயகப் பிரதேசங்களில் மீட்பு நடவடிக்கைகளை சிறப்பான முறையில் முன்னெடுத்திருந்தனர். ஓர் இயற்கையின் சீற்றம் ஏற்படும்போது மக்களே விழிப்பாகவும் சிறப்பாகவும் எவ்வாறு தங்களை தயார் நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதை ஆழிப்பேரலைப் பேரழிவு எமக்குச் சொல்லிக்கொடுத்துள்ளது. இடர்கள் ஏற்படும்போது அவற்றுக்கு ஆயத்தமாகும் முகமாக இடர் முன்னாயத்தத் திட்டங்கள், அறிவூட்டல், அனர்த்த அறிவிப்பு ஒலியெழுப்பல், சகல மட்டங்களிலும் விருத்தியாக்கப்படவேண்டிய கட்டாயத்தை ஆழிப்பேரலை உணர்த்திச் சென்றிருக்கின்றது. ஆனால் இலங்கையில் இன்னமும் இயற்கை இடர்கள் தொடர்பான முன்னாயத்தத் திட்டங்களில் தொய்வு நிலைமையே காணப்படுகின்றது. அதனை அண்மைய வெள்ள இடரின் போதும் உணரமுடிந்தது. அதைச் சீராக்க வேண்டியதும், புதிய தொழில்நுட்பங்களை அவற்றில் புகுத்த வேண்டியதும் காலத்தின் தேவை என்கின்றபோதும், இலங்கை அதில் அதிக கவனம் கொள்ளவில்லை என்பது கவலைக்குரியதே.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




## அடுத்த வருடத்தில் சம்பளம் அதிகரிப்பு



கொழும்பு, டிசெ. 26

**அரச ஊழியர்களின் சம்பளம் அடுத்த வருடம் கட்டாயம் அதிகரிக்கப்படும் என்றும் தொழிலமைச்சரும் பிரதிப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான அனில் ஜயந்த தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நாடு தற்போது பொருளாதார ரீதியில் நலிவுற்றுள்ளது என்று சம்பள உயர்வை காலம் தாழ்த்தலாம். ஆனால் நாம் அவ்வாறு சொல்லவில்லை. எமது ஆட்சியை ஸ்திரப்படுத்திக்கொள்வதற்கு சந்தர்ப்பமளியுங்கள் என்றே கூறுகிறோம். அடுத்த வருடத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை நிச்சயம் அதிகரிப்போம் - என்றார். (ச-33-6)

## அஸ்வெசுமவுக்கு புதிய வர்த்தமானி

கொழும்பு, டிசெ. 26

திருத்தம் செய்யப்பட்டு அதிகரிக்கப்பட்ட அஸ்வெசும நலன்புரிக் கொடுப்பனவு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. வறியவர்கள் மற்றும் மிகவும் வறியவர்கள் சமூகப் பிரிவினருக்கு வழங்கப்படுகின்ற மாதாந்த நலன்புரிக் கொடுப்பனவுத் தொகைமுறையாக 8,500 ரூபாவை 10,000 ரூபா வரை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2024 ஆம் ஆண்டின் மே மாதம் 17ஆம் திகதி வெளியிடப்பட்ட அஸ்வெசும நலன்புரிக் கொடுப்பனவு முறைமை இரத்துச் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## புதுப்பிக்கப்படும் ரயில் 'ரிக்கெற்'



கொழும்பு, டிசெ. 26

தற்போது பயன்படுத்தப்படும் ரயில் ரிக்கெற்றுக்கு பதிலாக முற்பணம் செலுத்திய ரயில் பயண அட்டை அறிமுகப்படுத்தப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் புதிய அட்டை அறிமுகம் செய்யப்படவுள்ளது. அந்த அட்டைகளைப் பயன்படுத்துபவர்கள் ஒவ்வொரு நிலையத்திலிருந்தும் அணுகுவதற்குத் தேவையான தொழில்நுட்பக் கருவிகளும் நிறுவப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## நிதி சேகரிப்பு மோசடி அமைச்சர் முறைப்பாடு

கொழும்பு, டிசெ.26

தனது கடிதத்தலைப்பையும் பதவி முத்திரையையும் போலியாக தயாரித்து சிலர் நிதி சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக ஊடக அமைச்சர் சுனில் ஹந்துன் நெத்தி குற்றப் புலனாய்வுப்பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார். கொரியா, ஜப்பான் போன்ற நாடுகளில் வசிக்கும் தனது நண்பர்களிடமே இந்தக் கும்பல் நிதி சேகரிக்க முற்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ச–45–6)

## 8,747 சாரதிகள் கைது

கடந்த 24 மணிநேரத்தில் நாட்டில் விபத்துகள் இடம்பெறவில்லை என்றும் மதுபோதையில் வாகனம் செலுத்திய 251 சாரதிகள் உட்பட, வீதிச் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் 8,747 சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என ஊடகப் பேச்சாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தாமல், வீதிச் சட்டதிட்டங்களை முறையாகக் கடைப்பிடிக்குமாறும் பொலிஸ் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ச–இ)

நாளை
வெள்ளிக்கிழமை - மார்கழி - 12
27.12.2024
சுபநேரம் : 06.27 - 07.57
ராகுகாலம் : 10.57 - 12.27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றின் மாசு ஆராய்வதற்கு யாழில் வளித்தர நிலையங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 26


யாழ்ப்பாணத்தில் காற்றின் மாசு தொடர்பில் ஆராய்வதற்காக சாவகச்சேரி மற்றும் வட்டுக்கோட்டையில் வளித்தர கண்காணிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனூடாக வளியின் தற்போதைய நிலை குறித்து கொழும்புக்கு அறிக்கையிடப்படவுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கொழும்பு, கண்டி, காலி மற்றும் வட மாகாணத்தில் காற்றின் தரம் மீண்டும் சாதகமற்ற நிலையை எட்டியுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் காற்றின் தரம் ஆரோக்கியமற்ற நிலைக்குச் சென்றுள்ளது எனவும் இதனால் பொதுமக்களை மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவுறுத்தியிருந்தது.

அத்துடன், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் காற்றின் தரம் தொடர்பில் ஒரு மாத காலத்துக்குத் தொடர்ச்சியான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்தநிலையில் கொழும்பிலிருந்து வருகை தந்த குழு சாவகச்சேரி மற்றும் வட்டுக்கோட்டையில் வளித்தர நிலையங்களை அமைத்துள்ளதோடு எதிர்வரும் ஜனவரி 5 ஆம் திகதி முதல் கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-125)



# குளங்கள் தூர்வாராமல் நிரப்பி வழியும் வெள்ளம்

## இராமாவில் மக்கள் அவதி

கொடிகாமம், டிசெ.26

கொடிகாமம் மற்றும் இராமாவில் வடக்கு கிராம அலுவலர் பிரிவுகளில் நான்கு குளங்கள் 50 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படாமையால் குளத்தில் நீர் நிரம்பி வழிந்தோடுவதால் அருகிலுள்ள வீதிகள், காணிகளில் வெள்ளம் சூழ்ந்து காணப்படுகிறது என்று அந்தப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். வீதிகள், காணிகளில் வெள்ளம் சூழ்ந்து காணப்படுவதால் போக்குவரத்துச்செய்ய முடியாத நிலை ஏற்படுவதோடு டெங்கு உள்ளிட்ட நோய்ப்பரவல்களும் ஏற்படுகின்றன.

எனவே இந்தப் பகுதிகளிலுள்ள கட்டைபறித்தான் குளம், சவாரிக்குளம், உண்ணியவயல் குளம், வண்ணான் குளம் ஆகிய நான்கு குளங்களையாவது புனரமைப்புச் செய்துதர அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-45-159)

# யாழ். மீனவர்களுக்கு சீன அரசின் வலைகள்

யாழ்ப்பாணம், டிசெ.26

சீன அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மீன்பிடி வலைகள் மணியந்தோட்டம், உதயபுரம், கொழும்புத்துறை, சுழிபுரம் போன்ற இடங்களைச் சேர்ந்த 200 கடற்றொழிலாளர்களுக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

ஒரு பயனாளிக்கு 60 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகள் வழங்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவிப்பணிப்பாளர் ஜெயராசசிங்கம் சுதாகரன் தெரிவித்தார். (ச-33-20)



# மின்கட்டண நிவாரணம் யாழில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.26

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களுக்கு மின் கட்டண நிவாரணம் வழங்கும் தொடர்பில் கணக்கெடுப்பு நடத்துவதற்கான செயலமர்வு யாழ். மாவட்ட பதில்ச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களுக்கு மின் கட்டணத்தில் நிவாரணம் வழங்கும் திட்டத்தில் அகில இலங்கை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட 9 மாவட்டங்களில் யாழ். மாவட்டமும் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, யாழ். மாவட்டத்தில் 1,050 முயற்சியாளர்கள் ஆய்வுக்குட்படுத்தப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-45-27)

# ஆசிரியர் பிரச்சினை; அடுத்தாண்டு தீர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 26

ஆசிரிய வளப்பிரச்சினைக்கு ஆசிரிய தொழிற்சங்கங்கள் மற்றும் கல்வி அமைச்சின் சகல அதிகாரிகளையும் இணைத்து அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் தீர்வு காணப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது அந்தச் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது வடக்கு மாகாணத்தின் முன்பள்ளிக் கல்வி தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனக் கோரியதுடன், ஆசிரியர்களுக்கு தற்போதைய காலத்துக்கு ஏற்ற வகையிலான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர். (ச)

# மயங்கி வீழ்ந்து மூதாட்டி சாவு

யாழ்ப்பாணம், டிசெ. 26

மயங்கி வீழ்ந்து வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் சாவகச்சேரி சங்கத்தானையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

மீனாட்சி அம்மன் கோவிலடி சங்கத்தானையைச் சேர்ந்த முத்துக்கிருஷ்ணன் வரதலட்சுமி (வயது -72) என்பவரே உயிரிழந்தவராவார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச-159)

# சட்டவிரோத மணலகழ்வு இளங்குமரன் எம்.பி. பார்வை

யாழ்ப்பாணம்,டிசெ.26

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கரம்பகம் பிரதேசத்தில் இடம்பெறும் சட்டவிரோத மணலகழ்வு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

மணலகழ்வைக் கட்டுப்படுத்த விசேட அதிரடிப்படையின் உதவியை நாடுவேன் என்றும் அவர் தெரிவித்தார். (ச-25,28)



# உதைபந்தாட்டத்தில் யங் பயிட்டர்ஸ் வாகை

யாழ்ப்பாணம், டிசெ.26

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய உள்ளூர் போட்டியான கே.எஸ்.பி.எல். சீசன் 3 உதைபந்தாட்டத் தொடரில் யங் பயிட்டர்ஸ் அணி வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கியுள்ளது.

இதன் இறுதிப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. யங் பயிட்டர்ஸ் அணியை எதிர்த்து பயிட்டர் கிங்ஸ் அணி மோதியது. விறு விறுப்பாக இடம்பெற்ற போட்டியின் இறுதியில் 2:0 என்ற கோல் கணக்கில் யங் பயிட்டர்ஸ் அணி வெற்றிபெற்று வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றது. முதலாம், இரண்டாம் அணிகளுக்கு வெற்றிக்கேடயத்துடன் பணப்பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன. (ச-33-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
06 . 02 . 1949

மறைவு
23 . 12 . 2024

## பொன்னம்பலம் சரவணதாசன்

**(இளைப்பாறிய ஓவசியர் P.W.D)**

கோயிலாக்கண்டி. மறவன்புலவைப் பிறப்பிடமாகவும் ஜி.பி.எஸ். றோட். கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சரவணதாசன் (இளைப்பாறிய ஓவசியர் P.W.D) அவர்கள் கடந்த 23.12.2024 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் மறவன்புலவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - மனோரஞ்சிதசிவமணி தம்பதியரின் அன்பு மகனும் கல்வியங்காடு ஜி.பி.எஸ். றோட்டைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பதேவியின் அன்புக்கணவரும் கோபி கிருஷ்ணனின் (R.D.A) அன்புத் தந்தையும், சரவணபவன் (கனடா), சரவணபாலன் (கனடா) காலஞ்சென்ற சரோஜினிதேவி மற்றும் சரவணதயாளன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஈஸ்வரிதேவி, சிவசூரியர், (அவுஸ்திரேலியா), கோபாலரத்தினம் (நோர்வே), காலஞ்சென்றவர்களான மகேசரத்தினம், உமாதேவி, அருட்சோதி மற்றும் அருணகிரிநாதன் (ஓய்வு பெற்ற C.T.O - யாழ்.பல்கலைக்கழகம்), உமாதேவி (கனடா), மனோகரன் (ஓய்வு பெற்ற T.O நீர்ப்பாசனத் திணைக்களம்) சிவராணி, சிவாசினி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2024) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் , அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஜி.பி.எஸ் றோட்,**
**கல்வியங்காடு.**

**தகவல்: குடும்பத்தினர்**
**மகன் - கோபி - 077 922 8762**

(CS/29489) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம்
10 . 10 . 1996

மறைவு
23 . 12 . 2024


## யேசுதாசன் தீபாயினி

மிருசுவில் படித்தமகளிர் குடியேற்றத் திட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யேசுதாசன் தீபாயினி கடந்த (23.12.2024) திங்கட்கிழமை அன்று அகால மரணமானார்.
அன்னார் காலஞ்சென்ற யேசுதாசன்-ஜெயசீலியம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற கிறேசியன் (தாசன்), தேவறஜனி (றஜனி-பிரான்ஸ்), மாக்றேற் (தயா-ஆங்கில ஆசிரியர் புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை கிளிநொச்சி), சுஜீவன் (சுவிஸ்), சுயானி (யானு-பிரான்ஸ்), ஜெயதீபன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவகுமார், யவீன் (ஜேர்மன்), வரின்ரன் (பிரான்ஸ்), றாஜனா ஆகியோரின் மைத்துனியும் சிந்து (பிரான்ஸ்), கெவின் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), அதிரியான் (பிரான்ஸ்), அஸ்ரல் (பிரான்ஸ்) ஆகியோரின் சித்தியும் அஸ்ரினின் அத்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதி யாத்திரை நாளை (27.12.2024) வெள்ளிக்கிழமை பி.ப 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு பழையவாய்க்கால் தூய வேளாங்கண்ணி ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 869 7381**

(CS 13227) V-1

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
03 . 10 . 1948

மறைவு
26 . 11 . 2024

கடந்த (26.11.2024) செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த

## அமரர் இராசையா மகேஸ்வரலிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்றுமுன்தினம் (24.12.2024) செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது.
அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (26.12.2024) வியாழக்கிழமை அவரது மைத்துனரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து பல வழிகளிலும் உதவி புரிந்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர்கள் , நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசி மற்றும் வலைத்தளங்களினூடாக துயர் பகிர்ந்தோருக்கும், வீட்டுக்கு வந்து ஆறுதல் கூறிய அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அம்பிகை ஸ்ரோர்ஸ்,**
**செல்லப்பா வீதி, உரும்பிராய் கிழக்கு.**

**குடும்பத்தினர்**
**076 368 6510**

(CS/57017) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம்
16 . 08 . 1944

மறைவு
23 . 12 . 2024

## அருட்செல்வி பரமேஸ்வரன்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அருட்செல்வி பரமேஸ்வரன் அவர்கள் கடந்த 23.12.2024 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான ஏரம்பு பண்டிதர் (ஆசிரியர்) - இராஜலட்சுமி தம்பதியினரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தில்லையம்மா தம்பதிகளின் மூத்த மருமகளும், காலஞ்சென்ற பரமேஸ்வரனின் (பிரபல புகையிலை வர்த்தகர் ) அன்பு மனைவியும், வராகினி (கனடா) அவர்களின் அன்புத் தாயாரும், சன்டீப் (கனடா) அவர்களின் மாமியாரும், வியான் அவர்களின் அருமை பேர்த்தியாரும், கலைமகள் (லண்டன்), அருண்மொழித்தேவர் (லண்டன்), சிவதேவன் (கனடா), மெய்கண்டதேவர் (கனடா), ஞானவாணி (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சபாநாதன், மற்றும் லோஜனா (லண்டன்), விஜயகலா (Dental Doctor - கனடா), கேதீஸ்வரி (கனடா), காலஞ்சென்ற ஜெயகுமார் ஆகியோரின் மைத்துனியும், தர்மலிங்கம், ஜெகதீஸ்வரி, குமரேஸ்வரன் (பிரபல புகையிலை வர்த்தகர்), சிவதேவி, அருளானந்தசோதி, ஜெகசக்தி ஆகியோரின் அண்ணியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.12.2024) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**வேலணை மேற்கு,**
**7ம் வட்டாரம், வேலணை.**

(CS/29490) J-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**
077 945 5550

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

அன்னையின் மடியில் 01 . 08 . 1944

ஆண்டவன் அடியில் 24 . 12 . 2024



## வடிவேலு நடராஜா

(ஓய்வு பெற்ற நீதிமன்ற ஆங்கிலச் சுருக்கெழுத்தாளர், முன்னாள் செஞ்சிலுவைச் சங்க நிர்வாக உத்தியோகத்தர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு நடராஜா அவர்கள் நேற்று முன்தினம் (24.12.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வடிவேலு-அழகம்மா தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை-தங்கேஸ்வரி தம்பதியரின் அருமை மருமகனும் இந்திராணியின் அன்புக் கணவரும் பிரியதீபன் (பொறியியலாளர்), பிரியதர்ஷனி (நீதிமன்றப் பதிவாளர்), நிமலினி (ஆசிரியர்), ஷாமினி (வைத்தியர்), பிரியதர்ஷன் (கணினி வரைஞர்) காலஞ்சென்ற பரந்தாமன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் விஜித்ரா (ஆசிரியர்), தர்ஷன் (உரிமையாளர் CafeChill), நரேந்திரா (Senior Manager), குணாளதாஸ் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சதுர்ஷ்னி, ருக்ஷியா, ஹஸ்வின், ஆருகி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.12.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

125, 2ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.


தகவல்:
குடும்பத்தினர்.

(CS 29549) P-1

# மரண அறிவித்தல்

மண்ணில் 15 . 07 . 1937

விண்ணில் 25 . 12 . 2024



## சின்னத்தம்பி சிவலிங்கம்

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவலிங்கம் அவர்கள் நேற்று (25.12.2024) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-பூதாத்தை தம்பதியரின் அன்புமகனும் காலம்சென்ற சிவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பொன்னம்மா மற்றும் முத்தம்மா, லட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மதிவதனி (பிரான்ஸ்), தர்மவதனி (பிரான்ஸ்), நகுலேந்திரராசா (இலங்கை), இரட்ணவதனி (பிரான்ஸ்), தேவகி (இலங்கை), திலகேந்திரராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சச்சிதானந்தம் (பிரான்ஸ்),சுகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற நேசமலர் மற்றும் வசீகரன் (பிரான்ஸ்), ராஜ்குமார் (இலங்கை), சிவாஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சந்தனா, சபீனா, அனுஷன், யனுஷன், கீர்த்திகா, பானுஷா, சுதர்சன், எலிஷா, தியானா, வருணன், தீபிகா, திவ்யா, வர்ஷனா, பகீரதி, சுபாசினி, அஸ்வின், பிரனுஷா, மேனுகா ஆகியோரின் அன்புப் பேரனும் மயிலனின் அன்புப் பூட்டனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காடகரம்பை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இசிதோர் தேவாலய வீதி,
ஏழாலை கிழக்கு,
ஏழாலை

தகவல்: குடும்பத்தினர்
075 506 7752, 077 977 3456
+33 758 289 517, +33 662 738 635

(CS 29546) P-1

# மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மநே நமஹ

## வரதலட்சுமி (வரதா) முத்துக்கிருஷ்ணன்



அன்னை மடியில் 12.02.1952

ஆண்டவன் அடியில் 24.12.2024

வேலணை வங்களாவடியைப் பிறப்பிடமாகவும், மீனாட்சி அம்மன் கோவிலடி, சங்கத்தானை, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட வரதலட்சுமி முத்துக்கிருஷ்ணன் நேற்றுமுன்தினம் (24.12.2024) செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - சௌந்தரநாயகி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், முத்துக்கிருஷ்ணனின் பாசமிகு மனைவியும், ராகுலன் (அவுஸ்ரேலியா), நிரூஷா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதி பிரதம செயலாளர்- திட்டமிடல் அலுவலகம், கைதடி), நிஷாலினி (ஆசிரியர் - யா/ மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரதீபன் (CFO, Lakeland Inter American School), பிறேம்லால் (Director, SPN Premier Group (Pvt) Ltd) ஆகியோரின் அன்பு மாமியாரும், சாக்ஷி, சஜ்வின் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், சரவணபவனின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் தையல்நாயகி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2024) வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் மீனாட்சி அம்மன் கோவில் வீதி, சங்கத்தானையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீனாட்சி அம்மன் கோவில் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்
077 385 9450 , 076 642 3456
077 127 5370.

(CR 43971) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2025 A/L பௌதிகவியல்**

M. கருணாநிதி B.sc (Hons)
English, தமிழ் மூலம்
54, கலைமகள் வீதி, அரியாலை.
Cola City இலுப்பையடிச்சந்தி யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:
**077 618 3064**

**வேலைக்கு ஆட்கள் தேவை (ஆண்கள்)**

மோட்டார் சைக்கிளில் சென்று விநியோகம் செய்வதற்கு ஆண்கள் தேவை.
சம்பளம் (45,00-60,000 வரை)
தொடர்புகளுக்கு:
**077 508 2659**

## வரம்புகளை மீறிய
# உயரடுக்குப் பாதுகாப்பு; செலவு இருமடங்கில்

கொழும்பு, டிசெ. 26

உயரடுக்குப் பாதுகாப்புப் பிரிவின் கீழ் 9 பொலிஸ் பிரிவுகளுக்கு நியமிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டு ஜனவரி 3,884 இல் இருந்து 2023 ஜனவரி 4,859 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வு அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக, 2018 முதல் 2022 வரை 4,342 மில்லியனாக இருந்த உயரடுக்குப் பாதுகாப்புப் பிரிவின் சராசரி ஆண்டுச் செலவு 2023ஆம் ஆண்டில் 5,833 மில்லியனாக அதிகரித்துள்ளது என்று கணக்காய்வு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. 2022 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டில் செலவானது 1,491 மில்லியன் ரூபா அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது. உயரடுக்குப் பாதுகாப்புக்காக மாத்திரம் அதிகாரிகளை தேவையின்றி இணைத்துக்கொள்வது மிகப்பெரிய தேசிய குற்றமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**கண்ணீர் அஞ்சலி**



அன்னை மடியில் 31 . 12 . 1981
இறைவன் அடியில் 23 . 12 . 2024

யாழ் பல்கலைக்கழக நடனத்துறையின் முதுநிலை விரிவுரையாளர் திருமதி சோபனா தர்மேந்திரா அவர்களின் பாசமிகு சகோதரர் திரு புலவர் ரமேஷ்குமார் அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

தலைவர்,
விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள்,
கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள்,
நடனத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

**பணியாளர்கள் தேவை**

காவடி மார்க் கற்பூர நிறுவனத்திற்கு கணினி இயக்குநர் தேவை. முன் அனுபவம் விரும்பத்தக்கது.
S.V.முருகேசு
154 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
**077 290 0184, 021 222 8899**
(CS/24498) J-1

**20ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகளில்......**

**வேலாயுதம்பிள்ளை மல்லிகாமலர்**
மருதமண்ணில் முத்தாக
08.06.1966

**வேலாயுதம்பிள்ளை இளவரசி**
மருதமண்ணில் முத்தாக
29.03.1995

ஆழிப் பேரலையில்
நெய்தலில் வித்தாக
26.12.2004



கனவுகள் கண்ணீர் காவியமானது
நினைவுகளில் பெரும் சோகம் மூண்டது
உறவுகள் பிரிவுகள் தொடர்கதையானது
உணர்வுகள் வரிகளில் ஊமையானது.

மருதங்கேணி வடக்கு,
மருதங்கேணி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
(CS/29486) J-1

## காரைநகர் இ.போ.ச.
# நேற்றுக் காலை
## பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 26

காரைநகர் சாலையின் சாரதி மற்றும் யாழ். சாலை நடத்துனர் மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து நேற்று மதியம் வரை காரைநகர் இ.போ.ச. சேவை இடம்பெறவில்லை எனத் தெரியவருகின்றது. நண்பகல் ஒரு மணிக்குப் பின்னர் சேவைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன. இந்த விடயம் தொடர்பான பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-125)

## சுன்னாகத்தில் விபத்து:
## இளைஞருக்குக் காயம்

யாழ்., டிசெ. 26

யாழ்ப்பாணம் - சுன்னாகம் சந்திக்கு அண்மையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு நடந்த விபத்தில் உடுவிலைச் சேர்ந்த இளைஞரொருவர் காயமடைந்து தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். சுன்னாகம் சந்திக்கு அண்மையில் பிரதான வீதியைக் கடக்க முற்பட்ட குறித்த இளைஞரை வேகமாக வந்த மோட்டார் சைக்கிளொன்று மோதியதில் மயக்கமுற்றுத் தரையில் விழுந்த குறித்த இளைஞர் தலையில் படுகாயமடைந்துள்ளார். இதையடுத்தே அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-66)

**மரண அறிவித்தல்**



பிறப்பு 19 . 09 . 1960
இறப்பு 25 . 12 . 2024

**ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தராசா**
(ஸ்ரீஸ்காந் எசன்ஸ் & CO)


கந்தர்மடம் மணல்தறைலேனைப் பிறப்பிடமாகவும், அரச வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் நேற்று (25.12.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - சிவநாயகி தம்பதியரின் அருமைப் புதல்வனும், காலஞ்சென்ற விஜயகுமாரி அவர்களின் அன்புக் கணவரும், சஜிவன் (மொறட்டுவப் பல்கலைக்கழகம் பொறியியல் பீடம் 3ம் வருட மாணவன்), மனோஜன் (ரஜரட்டைப் பல்கலைக் கழகம் 1ம் வருட மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற மகாலட்சுமி, நேசறஞ்சினி, சாந்தினி, கோகிலாவதி, சரோஜினி மற்றும் தர்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுமதி, கதிர்காமத்தம்பி, விக்னேஸ்வரன், சுந்தரலிங்கம், காலஞ்சென்ற சிவகுமார், சிவசுப்பிரமணியம், ஏகாம்பரநாதன் மற்றும் கேதீஸ்வரநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல 12 அரச வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
076 076 8532, 077 577 3033
(CS/49497) J-1

**மரண அறிவித்தல்**



**திரு இராசநாயகம் ஸ்ரீஸ்கந்தராஜா**

கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு இராசநாயகம் ஸ்ரீஸ்கந்தராஜா நேற்று (25.12.2024) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசநாயகம்-தவமணிதேவி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சண்முகநாதபிள்ளை-சரஸ்வதியின் மருமகனும் பிரபாநிதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராஜஇராஜனின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2024) வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 03.00 மணியளவில் கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நாகபூசனி அம்மன் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:
ஸ்ரீ.பிரபாநிதி (மனைவி)
076 834 0315
(CR 43973) P-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழையில் சுனாமி நினைவேந்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 27 சுனாமிப் பேரலையின் 20 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தெல்லிப்பழை துர்க்காபுரத்தில் இயங்கிவரும் சிற்பாலயம் கலைக்கூடத்தில் வரலாற்றுப் பதிவான சுனாமி சிற்பத்தின் முன்பாக இன்றுவியாழக்கிழமை காலை 9.25 மணியளவில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து மறைந்த சிற்பக் கலைஞர் ஏ.வி.ஆனந்தனின் கைவண்ணத்தில் உருவான சிற்பங்களின் கண்காட்சி இன்று மாலை 4 மணி வரை இடம்பெறவுள்ளது. (ம-66)

## கண்ணீர் அஞ்சலி

ஜனனம் 05 . 05 . 1940



மரணம் 25 . 12 . 2024

யா/ நல்லூர் சென் பெனடிக்ற் றோ.க. வித்தியாலய ஆசிரியை திருமதி சுமதி கனேஸ்வரன் அவர்களின் பாசமிகு தந்தை

### சீனியர் தியாகராசா

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ நல்லூர் சென்பெனடிக்ற் றோ.க. வித்தியாலயம்.

(CS/29492) J-1

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் அன்னம்மா (பரிமளம்)

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)



தோற்றம் 25.02.1936 மறைவு 25.12.2024

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கட்டைப்பிராயை வசிப்பிடமாகவும் தற்பொழுது நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் அன்னம்மா நேற்று (25.12.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்

இல. 03 பண்டாரக்குளம்,
மேற்கு வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்
077 477 1218

(CS 29494) V-1

## கலாசாரப் பெருவிழா யாழில் நாளை

யாழ்.,டிசெ.26 யாழ். மாவட்ட கலாசாரப் பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை அரியாலை மகா மாரியம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மாவட்டச் செயலர் ம.பிரதீபன் தலைமையில்நடைபெறவுள்ள விழாவுக்கு முதன்மை விருந்தினராக ஓய்வுநிலை அரச அதிபர் பத்மநாதன், சிறப்பு விருந்தினராக மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இதில் கலைஞர்களுக்கான யாழ். முத்து மற்றும் இளங்கலைஞர் விருதுகள் வழங்கப்படும். (ச-33-9)




## காணிகள் விற்பனைக்கு உண்டு


கல்வியங்காடு கட்டப்பிராய் சந்திக்கு அண்மையில் 2 பரப்புக் காணியும், நாவற்குழி சந்திக்கு அண்மையில் 4 பரப்பு காணியும் உடன் விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு: **076 193 3490** Whats App: **077 084 0453**

(CS 29517) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 06 . 1934



மறைவு 25 . 12 . 2024

### தர்மலிங்கம் மகேந்திரன்(செட்டியார்)

அராலி வடக்கு, செட்டியார்மடத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் மகேந்திரன் செட்டியார் அவர்கள் நேற்று (25.12.2024) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் செட்டியார்-பொன்னம்மா தம்பதியினரின் புதல்வரும் தையல்நாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நடராஜா, தியாகராசா, சந்திரசேகரர் ஆகியோரின் சகோதரனும் உதயகுமார், ஞானசோதி, இராஜகுமார், ஜெயசோதி, தயாசோதி ஆகியோரின் அன்புத் தந்தையும் யசோதரா, விக்னேஷ், சிவம், மஞ்சுளா ஆகியோரின் அன்பு மாமனாரும் அனுஷன், அனோஜா, பிரதிக்கா, அபிஷேக், ஈத்தன், அஸ்வின், ஆதவன், சஹானா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (29.12.2024) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அராலி வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

(CS 29500 P-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 09 . 1947



மறைவு 25 . 12 . 2024

### நடராசா நாகராஜா

பத்திரகாளி கோயிலடி வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா நாகராசா அவர்கள் நேற்று (25.12.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - நாகம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பு - பொன்னி தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2024) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுகொள்கின்றோம்.

பத்திரகாளி கோயிலடி,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

(CS/29491) J-1

தகவல்: குடும்பத்தினர்
077 220 8337

## கலந்துரையாடல்

யாழ். டிசெ. 26 அரிசி விற்பனையில் ஈடுபடும் மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்களுடனான கலந்துரையாடல் யாழ்.வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் யாழ்.வணிகர் கழகப் பணிமனை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-66)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில்...

(வயது-40), கஜன் யாழினி (வயது -34) ஆகியோரும் சகோதரியான கஜன் இசைநிலா (வயது-6) என்ற சிறுமியும் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய டிப்பர் சாரதி மதுபோதையில் இருந்துள்ளார். அவர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு முறையான கவனிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து, டிப்பர் சாரதி காயங்களுடன் மீட்கப்பட்டு பொலிஸ் பாதுகாப்புடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சாரதியின் அசமந்தத்தால் ஏற்பட்ட இந்த அநியாயச் சாவையடுத்து, மக்கள் திரண்டு விபத்தை ஏற்படுத்திய டிப்பரைத் தாறுமாறாகத் தாக்கியுள்ளனர். நீண்ட போராட்டத்தின் பின்னர் டிப்பரும் பொலிஸாரின் பாதுகாப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. 0அந்தப் பகுதியில் நேற்று இரவிரவாகப் பதற்றம் தொடர்ந்த நிலையில், சில மணிநேரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். (அ-ம-26-113)





## வெளிநாட்டுப்...

ஜனாதிபதியின் இந்தியப் பயணத்தின்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஊடக சந்திப்பை நடத்தி தெளிவுபடுத்தியிருந்தார். இலங்கையின் அரச ஊழியர்களுக்கு இந்தியாவில் பயிற்சி வழங்குவது உட்பட இரு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மட்டுமே இந்தப் பயணத்தின்போது கைச்சாத்திடப்பட்டன என்று அவர் சுட்டிக்காட்டியிருந்தார். அத்துடன், எட்கா ஒப்பந்தம் தொடர்பில் பேச்சுகளை முன்னெடுப்பதற்கு இணக்கம் காணப்பட்டது எனவும் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டிருந்தார். இதையடுத்தே, இந்தப் பயணத்தின்போது இரகசிய ஒப்பந்தங்கள் ஏதேனும் கைச்சாத்தாகினவா? என்பது தொடர்பில் கேள்விகளை எழுப்ப பிரதான எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

எட்காவுக்கு எதிராக முன்னர் போர்க்கொடி தூக்கியிருந்த ஜே.வி.பி.யினர் தற்போது அதனை ஏற்கத் தயாராகி வருகின்றனர் என எதிரணிகள் குற்றஞ்சாட்டியுள்ளன. எட்காவை மறைமுகமாக ஏற்கும் வகையிலேயே இலங்கை, இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மறுசீரமைப்பதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன எனவும் குறிப்பிட்டுள்ளன. எனவே, எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வில் அது தொடர்பிலும் கடுமையான விவாதங்கள் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளைச் சட்டத்தின் கீழ் அவர் இதுபற்றி கேள்வி எழுப்பக்கூடும். அவ்வாறு இல்லாவிட்டால் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை முன்வைக்கப்படக்கூடும். நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் இறுதி முடிவெடுக்கப்படும். அத்துடன், ஜனவரி முற்பகுதியில் ஜனாதிபதி சீனாவுக்குச் செல்கின்றார். அது தொடர்பாகவும் எதிர்க்கட்சிகள் வினவக்கூடும் என்றும் தெரியவருகின்றது. (அ-ம-44)

## புங்குடுதீவில்...

பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். கசிப்புக் காய்ச்சுதல், திருடிய மாடுகளை சட்டவிரோதமாக இறைச்சியாக்குதல் உள்ளிட்ட குற்றச் செயல்கள் சடுதியாக அதிகரித்துள்ளன. பொலிஸாரிடம் அது தொடர்பில் முறைப்பாடுகள் வழங்கிய போதிலும் எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டாலும் நீண்டநேரத்தின் பின்னரே பொலிஸார் வருகின்றனர். சிலவேளைகள் வருவதேயில்லை.

எனவே, இந்தக் குற்றச்செயல்களுக்கும் பொலிஸாருக்கும் தொடர்புண்டா? என்று எண்ண வேண்டியுள்ளது என்றும் பொதுமக்கள் மேலும் கூறியுள்ளனர். (அ-ம-26)

## குடும்பமொன்றின்...

யில் அவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஆலயம் தொடர்பான விவகாரத்தில் ஏற்கனவே இருந்த முன்பகையே இந்தத் தாக்குதலுக்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது. நபரொருவரும் அவருடைய மகனும் இணைந்தே பாதிக்கப்பட்ட குடும்பத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த குடும்பத்தலைவர் ஒருவரும், வயோதிபப் பெண்ணும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அத்துடன், மூன்று மாதங்களுக்கு முன்னர் அறுவைச் சிகிச்சைமூலம் குழந்தை பெற்றுக்கொண்ட பெண்ணின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26-27)

## கழுத்துக்குள்...

நிகழ்ந்த அரிதான அறுவைச் சிகிச்சைகளில் ஒன்றாக இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது.

கழுத்தில் ஒரு பக்கமாகக் குத்திய கூரியதடி மறுபக்கம் வந்த நிலையில், முதியவர் ஒருவர் ஆபத்தான நிலையில் வவுனியா மருத்துவமனையில் நேற்றுச் சேர்க்கப்பட்டார். அவருக்கு நேற்று அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. உணர்வழியியல் மருத்துவ நிபுணர் நாகேஸ்வரன் தலைமையிலான மயக்கமருந்து அணியினருடன் இணைந்து சத்திரசிகிச்சை நிபுணர் ரஜீவ் நிர்மலசிங்கம் தலைமையிலான குழுவினர் நீண்டநேரம் மேற்கொண்ட அர்ப்பணிப்பான முயற்சியின் விளைவாகவே, அந்தத் தடி அகற்றப்பட்டதுடன் அந்த முதியவரின் உயிரும் காப்பாற்றப்பட்டுள்ளது. (அ-ம-110)

## விபத்தில்...

ளார். நடராசா நாகராசா (வயது -76) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணம் யமுனா வீதியில் கடந்த இரண்டாம் திகதி இந்த விபத்து சம்பவித்துள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட அந்த முதியவர், கடந்த 12ஆம் திகதி வீட்டுக்குத் திரும்பியுள்ளார். எனினும், உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த அவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## யாழ்ப்பாணக்...

கம்பளைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, கண்டி, கலஹா மற்றும் நுவரெலியா, கந்தபொல ஆகிய பகுதிகளில் இந்தக் குழு கொள்ளையில் ஈடுபட்டது என்பது கண்டறியப்பட்டுள்ளது.

நகையகங்கள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் தொலைபேசி விற்பனை நிலையங்களே கொள்ளைக் கும்பலின் பிரதான இலக்காக இருந்துள்ளது. யாழ். நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதியில் மாத்திரம் இந்தக் குழுவினருக்கு 9 பிடியாணை உத்தரவுகள் உள்ளன என்று கலஹா பொலிஸார் தெரிவித்துள்ளனர். 4 வருடங்களாக நாட்டின் பல பகுதிகளில் வாடகைக்கு வீடுகளை எடுத்துத் தங்கியிருந்து இந்தக் கொள்ளைகளில் அவர்கள் ஈடுபட்டு வந்துள்ளனர். சந்தேகநபர்கள் 19 தொடக்கம் 26 வயதுடையவர்கள் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-ம-44)

## சுனாமிப்...

இலங்கையின் 14 கரையோர மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் சுனாமிப் பேரவலத்தின் பேரிழப்புகளைச் சந்தித்தனர். தேசியத் தரவுகளின் அடிப்படையில் 35 ஆயிரத்து 322 பேர் இந்தப் பேரிடரால் உயிரிழந்தனர். அதிகபட்சமாக அம்பாறை மாவட்டத்தில் 10 ஆயிரத்து 436 பேர் உயிரிழந்துள்ளனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் பெரியளவில் உயிரிழப்புகள் ஏற்பட்டன.

சுனாமி அனர்த்தத்தால் உயிரிழந்த இலங்கையர்களை நினைவுகூரும் வகையில் இன்று வியாழக்கிழமை காலை 9.25 முதல் 9.27 வரை நாடு முழுவதும் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், சுனாமி போன்ற பேரிடர்களில் இருந்து தற்காத்துக்கொள்ளும் விதமாக இலங்கையில் பிரகடனப்படுத்தப்பட்ட தேசிய தற்காப்புத் தினமும் இன்று கடைப்பிடிக்கப்படவுள்ளது. (அ-ம)

## ஒருங்கிணைப்பு...

பெறவுள்ளது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் முதலாவது ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இதுவென்பதால் இந்தக் கூட்டம் தொடர்பில் பெரியளவில் எதிர்பார்ப்புகள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## மஹிந்தவுக்காக...

ஏற்பாடுகளை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய நிறைவேற்றுக்குழு உறுப்பினரான சட்டத்தரணி ரவீந்திர ஜயசிங்க இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

"முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய பொலிஸ் பாதுகாப்பு நீக்கப்பட்டிருந்தால், தேவையின் நிமித்தம் என எண்ணி இருக்கலாம். ஆனால் பொருளாதார காரணங்களின் அடிப்படையில் முப்படையினர் நீக்கப்பட்டுள்ளமை ஏற்க முடியாது" - என்றார். (அ-ம-44)

## ஒருகோடி...

டுள்ளன. யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் இது தொடர்பில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கைதடி மெயின்றோட்டுடன் 42 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 1 1/2, 2 பரப்புகளாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- 20 அடிப்பாதையுடன் நிலப்பரப்பு, மேட்டுநிலம், நன்னீரூற்று
- UDA அனுமதி, பிரதேசசபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.
- பரம்பரை ஆவணம்.
- பார்வையிடும் நேரம் காலை 8.00 முதல் பிற்பகல் 1.00 மணி வரை, பிற்பகல் 3.00 முதல் பிற்பகல் 6.00 மணி வரை

குரு :- 076 069 1105, 076 298 1105

(CS/57012) J-1

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் அச்சுவேலி சந்நிதி வீதி வீரபத்திரர் றோட்டில் 5 1/2 பரப்புக் காணி 1 1/2 பரப்பாகப் பிரித்த நிலையில் விற்பனைக்கு உண்டு.**


- நிலப்பரப்பு
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி

தொடர்புகளுக்கு: 077 288 0152
077 468 3354

(CS 57013) V-1


## மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 08 . 1957



மறைவு
25 . 12 . 2024

### கார்த்திகேசு ஜெயச்சந்திரா
**(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்)**

13D யோகபுரம் மல்லாவியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, மலேசியா, கனடா, அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு ஜெயச்சந்திரா அவர்கள் நேற்று (25-12-2024) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - அன்னப்பிள்ளை தம்பதியரின் ஆசை மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இரத்தினேஸ்வரி தம்பதியரின் அருமை மருமகனும், அருந்ததி அவர்களின் அன்புக் கணவரும், விதுரணன், விதுகரன், ஹர்ணிகா, விகிர்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ப்ரியதாரிணி, சிவநிருபன், ப்ரியங்கா ஆகியோரின் அருமை மாமனாரும், சுந்தரலிங்கம், ஆனந்தராஜா, சுந்தராம்பாள், அரியமலர், நகுலேஸ்வரன், சத்தியபாமா, ஸ்ரீவதனி ஆகியோரின் அன்புச்சகோதரரும், கமலேஸ்வரி, ஜெயதேவி, பாலச்சந்திரன், கந்தசாமி, சந்திரராணி, சிவசுப்பிரமணியம், மதியழகன் ஆகியோரின் அருமை மைத்துனரும், தான்வியின் பாசமிகு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.12.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் உய்யக்கட்டுவை அளவெட்டி (அருணோதய கல்லூரிக்கு முன்பாக) அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மனைவி - 0094-76 743 1425, 0094-76 811 2749
விதுரணன் - 001-709 764 0020 (Canada)
விதுகரன் - 001-709 219 3852 (Canada)
ஹர்ணிகா - 0044-739 424 2730 (UK)
விகிர்தன் - 0031-642 854 164 (Holland)

தகவல் :
குடும்பத்தினர்

CS/29493) J-1



# 72 பயணிகளுடன் வீழ்ந்து வெடித்த விமானம்

## கஜகஸ்தானில் பயங்கரம்

**யாழ்ப்பாணம், டிசெ. 26**

**72 பேருடன் பயணித்த விமானம் ஒன்று கஜகஸ்தானின் அக்தாவ் விமான நிலையம் அருகே விழுந்து விபத்துக்குள்ளானது.**

அசர்பைஜானின் பாகுவிலிருந்து ரஷ்யாவின் க்ரோஸ்னி நகரை நோக்கி நேற்றுப் புறப்பட்ட இந்த விமானம், அடர் பனிமூட்டத்தால் பாதிக்கப்பட்டுத் திசைமாறி கஜகஸ்தானின் அக்டாவ் விமான நிலையத்துக்குச் செலுத்தப்பட்டது. விமானம் அக்டாவ் விமான நிலையத்தை அடையும் முன்பு, கீழே விழுந்து நொறுங்கியதுடன், பயங்கரமாக வெடித்துள்ளது.

விமானத்தில் குறைந்தது 67 பயணிகள் மற்றும் ஐந்து பணியாளர்கள் இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. விபத்து நடந்த இடத்துக்கு மீட்புப் படைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை ஆறு பேர் மீட்கப்பட்டுள்ளதாகவும் எனினும் அவர்களின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரம் தெரிவித்துள்ளது. (ச-இ)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் உரும்பிராயில் 6 பரப்புக் காணி இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

- 18 அடிப்பாதையுடன் நன்னீரூற்று
- உரும்பிராய்ச்சந்தியிலிருந்து 500m தூரம்
- உரும்பிராய்ச்சந்தியிலிருந்து கோப்பாய் செல்லும் பிரதான காபற் வீதியிலிருந்து 50m தூரம்.
- பார்வையிடும் நேரம் காலை 8.00 முதல் பிற்பகல் 1.00 வரை மற்றும் பிற்பகல் 3.00 மணி முதல் பிற்பகல் 6.00 வரை. தொடர்புகளுக்கு:

குரு : 076 017 1105

(CS/57011) J-1

## உடனடி வேலைவாய்ப்பு

- தொழில்நுட்ப உத்தியோகத்தர் (Technical Officer)
- MDF, Shutter Board வேலை தெரிந்தவர்கள்
- வெல்டர் (welders)
- காப்பென்டர் (Carpenter)
- பெயின்ரர் (Painter)
- மேசன்
- மேசன் உதவியாளர்
- தொழிற்சாலை உதவியாளர்கள் (ஆண் / பெண்)
- CNC வடிவமைப்பு இயக்குநர் (ஆண் / பெண்)
- அலுவலக உதவியாளர்- பெண்
- பாதுகாப்பு உத்தியோகத்தர் - ஆண்
- சாரதி (AD சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் மட்டும்)

- அனுபவமுள்ளவர்களுக்கு உடனடிவேலை
- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
- நேர்முகத்தேர்வு 28.12.2024 காலை 10.00 மணிக்கு அலுவலகத்திற்கு நேரில் வரவும்

**EUT**
**புன்னாலைக்கட்டுவன் தெற்கு, யாழ்ப்பாணம்.**

021 224 0110 / 077 287 2519


## இறைச்சி இலஞ்சம் அதிகாரிகள் சிக்கினர்

ஒரு கிலோ கோழி இறைச்சியை இலஞ்சமாக வாங்கிய வருமான வரி உத்தியோகத்தரும் களப்பணியாளரும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர். கொஸ்கம பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் 1,170 ரூபா பெறுமதியான ஒரு கிலோ கோழி இறைச்சியை இலஞ்சமாக கோரியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org